பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 08 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. உலகின் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட முடியும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. புற்றுநோய் பாதிப்பு இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதில் தவெக அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ஆனந்த் தெரிவித்துள்ளார்.

4. பெரம்பலூரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. மு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

5. ஆசியக் கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இன்று இந்தியா - தாய்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

உலகின் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட முடியும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் உற்பத்திப் பொருட்களுக்கான தரநிலை சான்றிதழ் வழங்குவதற்கான தேசிய சோதனை மையத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த மையம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தயாரிக்கப்படும் சூரிய சக்தியில் இயங்கும் வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சார வாகனங்கள், விமான உதிரி பாகங்களின் தர நிலையை சோதனை செய்து சான்றிதழ் வழங்கும் என்று அவர் கூறினார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் குறித்து உலக அளவில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் தர சோதனைகள் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மொபைல் மற்றும் வாகன உற்பத்தியில் இந்தியா உலகின் மையமாக உருவெடுத்து வருவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

புற்றுநோய் பாதிப்பு இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதில் தவெக அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சென்னை தரமணியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மருத்துவர்கள் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

புற்றுநோய் பாதிப்பு குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதுடன், சமூக சேவைகளிலும் பங்கேற்க வேண்டும் என்று திரு ஆனந்த் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இளைஞர்கள் வளர்ந்து வரும் தொழிநுட்பங்களைத் திறம்படக் கற்றுக்கொண்டு, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு காந்திராஜ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் தனியார் வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இளைஞர்கள் இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இளைஞர்கள் பயன்பெறும் வகையில், அரக்கோணத்தில் விரைவில் புதிய தொழில்பூங்கா அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு காந்திராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு அரசின் கலைப் பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் சிறுவர் மன்றங்கள் மூலமாக அவர்களின் கலைத்திறமையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நாமக்கல் மாவட்டத்தில் பாரம்பரிய கலைகளை இளம்தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் அவர்களுக்கு இந்த மன்றங்கள் மூலம் பயிற்சி வழங்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பெரம்பலூரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. மு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

பெரம்பலூரில் நடைபெற்ற அக்கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயிகளின் பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மலைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. மு. வீரபாண்டியன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களில், அடுத்த ஐந்து தினங்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகக் கடலோர பகுதிகளில் நிலவி வரும் கீழடுக்கு வளிமண்டல காற்றழுத்தத் தாழ்வுப் பாதை காரணமாக, வட கடலோர மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டியுள்ள மாவட்டங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் ஒருசில பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்ஸியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில் இன்று லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தெற்கு சூடானில் இடம் பெயர்ந்துள்ள அந்நாட்டு மக்களுக்கு உதவிடும் நடவடிக்கைகளில், இந்திய அமைதிப்படை தொடர்ந்து ஈடுபடும் என்று ஐநா அமைதி நடவடிக்கை அமைப்புத் தெரிவித்துள்ளது.

------------

அமெரிக்காவில் H-1B விசா மற்றும் பிற வெளிநாட்டினர் தங்களது பணிக்காலம் முடிவடைந்த பிறகு வழங்கப்படும் 60 நாள் விருப்ப அவகாச காலத்தை ரத்து செய்வதற்கான முன்மொழிவு குறித்து அந்நாட்டு அரசு பரிசீலனை செய்து வருகிறது.

------------

ஜம்மு - காஷ்மீரில், முதலாவது சர்வதேசத் திரைப்படவிழாவை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளை காஷ்மீர் கோட்ட ஆணையர் திரு அன்சுல் கார்க் ஆய்வு செய்தார்.

------------

பஞ்சாபில், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஒட்டுமொத்தமாக தற்காலிக விடுப்பில் சென்ற அரசு ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயர் அதிகாரிகளுக்கு அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

------------

ஹரியானாவில், கழிவிலிருந்து எரிவாயு தயாரிப்பதற்கு நான்கு ஒருங்கிணைந்த ஆலைகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அம்மாநில அரசு கையெழுத்திட்டுள்ளது.

------------

மத்தியப்பிரதேசத்தில் போதைப்பொருள் தடுப்பு வாரிய அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக கடத்தப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

------------

நேபாளத்தில் இருந்து மீட்கப்பட்டு தாயகம் திரும்பியுள்ள கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றலாப் பயணிகளை மாநில வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. ராஜ்குமார் வரவேற்றார்.

------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கான வழிகாட்டி மையத்தில் காலியாக உள்ள தொகுப்பூதிய அடிப்படையிலான பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

------------

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்க முதலமைச்சர் வருவதையொட்டி அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல்துறை தலைமை இயக்குநர் நேற்று ஆய்வு செய்தார்.

------------

திருப்பூர் மாவட்டத்தில், மத்திய அரசின் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ், மாணவிகளுக்கு அன்றாடம் பயன்படுத்தப்படும் சோப்பு, ஷாம்பு போன்ற பொருட்களை இயற்கையான முறையில் தயாரிப்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

------------

சென்னை பெசன்ட் நகர் வேளாங்கண்ணி மாதா ஆலயத்திற்கு பசிலிக்கா என்ற சிறப்பு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இன்று இந்தியா - தாய்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இன்றிரவு 8 மணிக்குத் தொடங்குகிறது.

----------------

Lagos சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Talasila பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-9, 22-20 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீரரான Lalthazuala - வை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் Rutaparna PANDA - Swetaparna PANDA இணை பட்டம் வென்றது.

இறுதிப்போட்டியில் இந்த இணை 21-14, 25-23 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Kavipriya SELVAM - Simran SINGHI இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் Dhruv RAWAT - MANEESHA இணை பட்டம் வென்றது.

இறுதிப்போட்டியில் இந்த இணை 21-18, 17-21, 16-11 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Sathwik Reddy KANAPURAM - Radhika SHARMA இணையை வென்றது.

------------

தாய்பே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதிஷ்குமார் சின்ஹா, மணீஷ் சுரேஷ்குமார் இணை பட்டம் வென்றது.

------------

Pontianak சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இன்று இந்தியாவின் Tanvi Patri, தென் கொரியாவின் KIM Min Sun-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் Ginpaul Sonna இந்தோனேசியாவின் Richie Duta RICHARDO-ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<>>>>**